சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா.1 கணபதி த /பெ சண்முகம் , வயது 54 .

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.-**

நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் என்னை விசாரித்த பின்பு வேறு எப்போது விசாரித்தார்கள் என்றால் தற்போது நீதிமன்றத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை தாக்க பயன்படுத்திய இரும்பு ராடை நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை அடிப்பட்டவுடன் நான் மருத்துவமனைக்கு வந்துவிட்டேன் விசாரணைக்கு சம்பவ இடம் சென்ற போலீசார் இரும்பு ராடை கைப்பற்றினார். போலீசார் என் முன்பு இரும்பு ராடை கைப்பற்றினாரா என்றால் இல்லை. சான்று பொருள் எங்கு கைப்பற்றினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னை தாக்கிய இடத்தில் வைத்து தான் கைப்பற்றினார்கள். இந்த விவரம் மற்றவர்கள் தெரிவித்து தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா. 2 உத்திரமூர்த்தி த /பெ சண்முகம் , வயது 45 .

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.-**

1. திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சிகிச்சையில் சேர்ந்த அன்றே இரவு போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது என்னை போலீசார் விசாரித்த பின்பு வேறு எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள். தேதி எனக்கு 25 ஆ, 26 ஆ என்று குறிப்பிட்டு நியாபகம் இல்லை. சென்னையில் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. ஆனால் 3 மாதங்கள் வெளிநோயாளியாக மருத்துவர் கூறும் போதேல்லாம் சிகிச்சை பெற்று வந்தேன். நான் சென்னையில் தங்கி சிகிச்சை பெற்றேன் என்றால் சென்னையிலும் எனக்கு வீடு இருப்பதால் அங்கேயும் தங்கியருந்தேன். திருப்பத்தூரிலும் தங்கியருந்தேன்.

2. நான் முதல் விசாரணையில் 10 நாட்கள் சென்னையில் தங்கி சிகிச்சை பெற்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சீரியசாக இருந்ததால் அங்கு தங்கி சிகிச்சை பெற்றேன். நான் சென்னையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததால் 26.10.2022 அன்று போலீசார் என்னை விசாரிக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிக்ள தாக்கியதால் ஏற்படவில்லை என்றாலும் அ.சா.1 ன் பால் கேன் தூக்கும்போது தவறி விழுந்ததால் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.